# முனாபிக்குகளோடு ஒரு முஸ்லிம் எவ்வாறு நடந்து கொள்வது தொடர்பான ஜமாஅதுல் முஸ்லிமீனின் ஆய்வின் முடிவு.

அல்லாஹ்வின் தூதர் ﷺ அவர்கள் கூறினார்கள்:

“நான்கு குணங்கள் எவரிடம் குடிகொண்டுள்ளனவோ அவர் அப்பட்டமான நயவஞ்சகர் ஆவார். எவரிடம் அவற்றில் ஒரு குணம் குடிகொண்டுள்ளதோ அவர் அதை விட்டுவிடும் வரை அவருள் நயவஞ்சகத்தின் ஒரு குணம் குடியிருக்கும். பேசினால் பொய் சொல்வதும், ஒப்பந்தம் செய்து கொண்டால் (நம்பிக்கை) மோசடி செய்வதும், வாக்களித்தால் மாறுசெய்வதும், வழக்காடினால் நேர்மை தவறுவதுதான் அவை (நான்கும்).”

ஸஹீஹ் முஸ்லிம் : 106.

மேற்படி ஹதீஸின் அடிப்படையில் எவரிடத்தில் மேற்கூறப்பட்ட நான்கு பண்புகளும் ஒருமித்துக் காணப்படுகின்றதோ அவர் முனாபிக் ஆவார். முனாபிக் ஒருவருக்குரிய பண்புகளைக் கொண்டுள்ள ஒருவர் ‘ஷிர்க், குப்ர் ஆகியவற்றில் ஈடுபட்டால் - அவரைக் காண்பவர் அவரது ஷிர்க் அல்லது குப்ரை இரண்டு சாட்சிகளைக் கொண்டு தலைமைத்துவத்தினிடத்தில் நிரூபிக்க வேண்டும். சாட்சிகள் இல்லாத நிலையில் சத்தியம் செய்யும்படி தலைமைத்துவம் குற்றம் சாட்டப்பட்டவரைப் பணிக்கும். குறித்த அச்சந்தர்ப்பத்தில் தான் ஷிர்க் அல்லது குப்ரை செய்ததை உரியவர் ஒத்துக்கொண்டால் அவரது கலிமா செயலிழந்தது விட்டதன் காரணமாக அவர் மீண்டும் பைஅத் செய்து இஸ்லாத்தில் இணைய வேண்டும். தலைமைத்துவம் சத்தியம் செய்யும்படி பணிக்கும்போது தான் ‘ஷிர்க்கையோ அல்லது கு.ஃப்ரையோ செய்யவில்லை என தன்மீதான குற்றச்சாட்டுகளை மறுத்து உரிய நபர் சத்தியம் செய்தால் குறித்த நபரின் குற்றம் நிரூபிக்கப்படாமையின் காரணமாக அவர் குற்றம் அற்றவராகவே கருதப்படுவார். அத்துடன், ஜமாஅத்தில் உள்ள முஸ்லிம்களுக்கு எவ்வித உரிமைகள் காணப்படுகின்றதோ அதே உரிமைகள் அவருக்கும் கொடுக்கப்படல் வேண்டும். அத்துடன், குறித்த நபர் மீதான குற்றச்சாட்டுகளை முன்வைத்தவர் தலைமைத்துவத்தின் தீர்ப்பை ஏற்றுக் கொள்ளுதல் வேண்டும். தீர்ப்புக்கு எதிராகக் குழப்பம் விளைவித்தல் கூடாது. எனவே, தலைமைத்துவத்தின் தீர்ப்பை ஏற்றுக் கொண்டு ஏனைய முஸ்லிம்களோடு எத்தகைய அமைப்பில் நடந்து கொள்ள வேண்டுமோ அதே அமைப்பில் குறித்த நபர் விடயத்திலும் நடந்து கொள்ளுதல் வேண்டும். அதே நேரம், குறித்த குற்றச்சாட்டுக்களை முன்வைத்த நபர், குறித்த நபரின் செய்கைகள் தொடர்பில் விரும்பினால் அல்லாஹ்விடம் அது தொடர்பில் முறையிடலாம்.